2

தொல்காப்பியர் சுட்டும் மலர்களின் மருத்துவச் சிந்தனைகள்

Medicinal Perspectives on the Flowers Mentioned by Tolkappiyar

ஆ. கார்த்திக்கேயன், மணிமேகலை.இர

தமிழ்த்துறை, பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர் -641004.

Karthickeyan.A, Manimegalai.R

Tamil Department, PSGR Krishnammal College for women, Peelamedu, Coimbatore- 641004.

Orcid ID: https://orcid.org/0009-0001-0918-4964

Orcid ID: https://orcid.org/0000-0002-7060-8551

DOI: 10.5281/zenodo.21735691

Abstract

Nature and natural medicine are inseparably intertwined with human life in Tamil literature. Particularly, the Purathinai poems of Sangam literature portray human life, warfare, heroism, and social values through various elements of nature. Among these, flowers serve as important symbols and identifiers of the Purathinai landscape. Classical Tamil works such as the Tolkappiyam and the Purapporul Verba Mulai record a variety of flowers, ranging from Vetci to Uzhinjai, as symbolic markers of different Purathinai categories. These flowers are significant not only as literary symbols but also as valuable medicinal resources. In Siddha medicine, folk medicine, and other traditional systems of natural healing, they have been widely used in the treatment of various ailments. This study aims to examine the literary significance of the Purathinai flowers described in the Tolkappiyam and the Purapporul Venba Mulai, as well as their medicinal properties and therapeutic applications, based on data collected through textual analysis and field research.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியங்களில் பதிவான இயற்கையும், இயற்கை மருத்துவமும் மனித வாழ்வில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. சங்க கால இலக்கியங்களில் குறிப்பாகப் புறத்திணையில் மனித வாழ்வியலை வெளிப்படுத்தும் போது, பல்வேறு வகைப்பட்ட பூக்கள் முக்கியக் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களில் வெட்சிப்பூ முதல் உழிஞைப் பூ வரை இப்பூக்கள் இலக்கியச் சின்னங்களாக விளங்குகின்றன. இலக்கியத்தில் மட்டுமல்லாது மருத்துவத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இயற்கை மருத்துவத்தில் பல நோய்களுக்கு இவை மருந்தாகப் பயன்பட்டுள்ளன. இப்பூக்களின் மருத்துவத் தன்மை கள ஆய்வின் வழியும், நூல்களின் வழியும் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகளின் படி இப்பூக்களின் மருத்துவக் குணங்களையும் அதன் பயன்பாட்டையும் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Keywords: *Purathinai, Tolkappiyam, Purapporul Venba Mulai, Purathinai Flowers, Natural Medicine, Siddha Medicine, Medicinal Plants, Sangam Literature, Literary Symbolism, Field Study, புறத்திணை, தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, புறத்திணைப் பூக்கள், இயற்கை மருத்துவம், மருத்துவத் தாவரங்கள், சித்த மருத்துவம், சங்க இலக்கியம், இலக்கியக் குறியீடுகள், களஆய்வு.*

முன்னுரை

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்களுடைய வாழ்வின் வளங்களை விவரிக்கும் சங்க நூல்களில் மருத்துவக் கலை பற்றிய பல்வேறு செய்திகள் உவமைகளாகவும், வர்ணனைகளாகவும் விவரிக்கப்பட்டுள்ளன. இக்குறிப்புகளை நோய், மருந்து, மகளிர் மருந்து, மூலிகை மருத்துவம், அறுவை மருத்துவம், மருத்துவ நம்பிக்கை,மருத்துவக் கொள்கை என்னும் பிரிவுகளில் பகுத்து ஆராயப்பட வேண்டியுள்ளது. இவற்றை ஆழ்ந்து, ஆராய்ந்து நோக்குங்கால் தமிழ் மருத்துவ வரலாறு பற்றிய வேர்கள் புலனாகின்றன. தமிழ் மக்களின் வாழ்வியலை அறியவும், ஆராயவும் பெரிதும் உதவும் முதல் நூல் தொல்காப்பியம்.

தொல்காப்பியர் பல மருத்துவக் குறிப்புகள் மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றிக் கூறுவதைப் பொருளதிகாரத்தில் காண முடிகிறது. தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றில் நோய், பிணி என்ற இரு சொற்கள் உடல் நலக்குறைவு என்ற நிலையினைச் சுட்டுகிறது என்றாலும் நோய் பையுள் மன வருத்தம் தருகின்ற துயரங்கள் என்றும், உடல் வருத்தம் தருகின்ற துயரங்கள் பிணி சிறுமை என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. நோய் தீர்ந்துவிடும்.பிணி நீங்காது. பிறவி, காமம், பசி ஆகியவற்றைத் தமிழ்ச் சான்றோர் பிணி என்றனர். அதனை, "பையுளும், சிறுமையும் நோயின் பொருள்" *(தொல். சொல்:341)* என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

ஒல்காப்புகழ் தொல்காப்பியரின் பொருளதிகாரம் மற்றும் ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள புறத்திணையில் தமிழர்களின் வாழ்வை அகம் புறம் என இரு கூறுகளாகப் பிரித்துக் காட்டியுள்ளனர். அகத்திணை ஏழாகவும் புறத்திணை ஏழாகவும் உள்ளன. இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய ஏழும் அகத்திணையில் அடங்கும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ,காஞ்சி, பாடாண் ஆகிய ஏழும் புறத்திணையில் அடங்கும். புறத்திணையில் உள்ள "கரந்தை" வெட்சியுள் அடங்கும். உழிஞைத் திணையினுள் "நொச்சி" அடங்கும்.

ஆக்களைத் திருடுவதும் திருடிய ஆக்களை மீட்பது மாகிய செயல்கள் வெட்சித் திணையில் அடங்கும். ஒரு நாட்டின் மீது இன்னொரு நாட்டரசன் படையெடுத்துச் செல்வதைக் குறிக்கும் திணை "வஞ்சி" ஆகும். அரண்களை முற்றுகை இடுவதைப் பற்றிக் கூறுவது "உழிஞைத்திணை" ஆகும். இத்திணையின் மறுதலை ‘‘நொச்சித் திணையாகும்’’. பெருவேந்தர்களின் போரையும் தனிமனிதனின் வீரத்தையும் சிறப்பித்துக் காட்டும் திணை மற்றும் போரின் உச்சநிலை என்று தும்பைத் திணையைக் கூறலாம் ஒருவனின் வெற்றியும் வீரமும் கண்டு உள்ளம் கிளர்ந்த ஒருவர் அவற்றைப் புகழ்தல் "வாகைத்திணை" ஆகும். ஒவ்வொரு திணை நிலங்களிலும் போர் நடக்கும். அவ்வாறு போர் நடக்கும் பொழுது போர் அரசர்களும் வீரர்களும் தங்களை எந்தெந்தத் திணை வீரர்கள் என்று அடையாளம் காட்டுவதற்காகத் தங்களுடைய அடையாளப் பூவாக அந்தந்தத் திணைகளுக்குரிய பூக்களைச் சூடுவர். அத்தகைய சிறப்பான பூக்களினுடைய மருத்துவத் தன்மையையும் மருத்துவப் பயன்பாட்டையும் ஆய்வுக்கட்டுரை ஆய்வுக்குட்படுத்துகிறது.

புறத்திணையில் உள்ள பூக்களின் மருத்துவக் குணம்

வெட்சிப்பூ

தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை தமது புறத்திணையியலில் வெட்சி முதலாக காஞ்சி ஈறாக எட்டு மலர்களைப் பதிவிட்டுள்ளன. அவற்றில் முதலாக அமைவது வெட்சி. வெட்சிப்பூ வெப்பமும் ஈரப்பதமும் நிலவும் பருவங்களில் மலரக்கூடியது. வெட்சிப் பூவை (சிவப்பு) இன்று பேச்சு வழக்கில் "இட்லிப்பூ" என்றழைக்கின்றனர். வெட்சிப்பூவை ஆங்கிலத்தில் "*Jungle Geranium*" என்றும் தாவரவியலில் "Ixoracoccinea" என்றும் அழைக்கின்றனர். இப்பூ தோல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்பட்டிருக்கிறது. ஜூரரோகம், மேகச்சூடு, சரீர ஆயாசம், தாகம் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம் என சித்தானந்தா தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

பயன்படுத்தும் முறை

வெட்சிப் பூவை எடுத்து அதனைக் கசக்கி அந்தச் சாற்றை உடம்பில் எந்த இடத்தில் தோல் சம்பந்தப்பட்ட நோய் இருக்கிறதோ அங்கு அந்தச் சாறைத் தேய்க்க வேண்டும். அப்படித் தேய்த்து வந்தால் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்தில் நலமாகும்.

கரந்தைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் கரந்தைப் பூ இரண்டாவதாக இடம்பெறுகின்றது. இதன் மலர்ச்சி பொதுவாக மழைக்காலத்தைத் தொடர்ந்து ஈரப்பதம் நிலவும் பருவத்தில் மணல் கலந்த மண் மற்றும் செம்மண்ணில் மலர்கின்றன. கரந்தைப் பூவை இன்று பேச்சு வழக்கில் "வாடாமல்லி" என்று கூறுகின்றனர். கரந்தைப் பூவை ஆங்கிலத்தில் *EAST INDIAN GLOBE THISTLE* என்றும் தாவரவியலில் *SPHAERANTHUS INDICUS* என்றும் அழைக்கின்றனர். கரந்தை எனப்படும் பூ சித்த மருத்துவத்தில் மிக முக்கியமான அபூர்வமான மருத்துவ குணங்கள் கொண்ட ஒரு சிறிய செடி இனமாகும். நோய் எதிர்ப்பு சக்தி, ரத்த சுத்திகரிப்பு, தோல் நோய்கள், வயிற்றுப் பூச்சிகள், செரிமானம், முடி வளர்ச்சி, மூளை மற்றும் இதயம், வெள்ளைப்படுதல், சர்க்கரை நோய், புற்றுநோய் போன்றவற்றிற்குக் கரந்தைப் பூவைப் பயன்படுத்துகின்றனர்.

பயன்படுத்தும் முறை

கரந்தைச் செடி மற்றும் பூவை எடுத்து, நிழலில் உலர்த்தி பொடி செய்து கொள்ளவும். இந்தப் பொடியுடன் சிறிதளவு வசம்பு சூரணத்தைச் சேர்த்து வைத்தால் ஒரு வருடம் வரை கெடாமல் இருக்கும். தினமும் கால் ஸ்பூன் பொடியை உட்கொண்டு வந்தால் உடல் வலுப்பெறும் . கரந்தை இலை மற்றும் பூ அரை கிலோ எடுத்து, நன்றாகக் காய வைத்து தூள் செய்து, ஒரு தேக்கரண்டிப் பொடியை ஒரு ஆளாக்குத் தண்ணீரில் கலந்து கொதிக்க வைத்து, தினமும் குடித்து வந்தால் பெண்களுக்கு ஏற்படுகின்ற வெள்ளைப்படுதல் போன்றவை குணமாகும்.

வஞ்சிப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் வஞ்சிப்பூ மூன்றாவதாக இடம்பெறுகின்றது. இப்பூ நீர்வளம் மிகுந்த ஆற்றங்கரைச் சூழலில் மலர்கின்றன. வஞ்சிப் பூவை ஆங்கிலத்தில் *INDIAN WILLO* தாவரவியல் *SALIX TETRASPERMA* என்றும் அழைக்கின்றனர். வஞ்சி மரம் மற்றும் அதன் பூக்கள் பல அரிய மருத்துவ குணங்களைக் கொண்டவை. இது புராணங்களில் "சாகா மொழி" என்றழைக்கப்படுகின்றது. சிறுநீரகக் கோளாறுகள்,மஞ்சள் காமாலை, மலச்சிக்கல், சீதபேதி, காசநோய், சர்க்கரை நோய் போன்றவற்றுக்கு வஞ்சிப் பூவை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

பயன்படுத்தும் முறை

வஞ்சிப் பூவை நிழலில் உலர்த்தி, பொடி செய்து நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தலாம். புதிய பூக்களைப் பாலில் கலந்து காய்ச்சிக் குடிக்கலாம். பூக்களைத் தேனில் ஊற வைத்து உட்கொள்வது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

காஞ்சிப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் காஞ்சிப்பூ நான்காவதாக இடம்பெறுகின்றது. இப்பூ நீர்நிலைகள் மற்றும் ஆற்றங்கரையைச் சார்ந்த சூழலில் வண்டல் மற்றும் களிமண் கலந்த மண்ணில் மலர்கின்றன. காஞ்சிப் பூவை ஆங்கிலத்தில் *INDIAN PORTIA TREE* என்றும் தாவரவியல் *TREWIA NUDIFLORA* என்றும் அழைக்கப்படுகின்றனர். காஞ்சிப்பூ பல மருத்துவ குணங்களைக் கொண்ட ஒரு பாரம்பரிய மூலிகைப் பூவாகும். இது பொதுவாக உடலைக் குளிர்ச்சியாக வைக்கும், தோல் தொடர்பான நோய்களைத் தீர்ப்பதற்கும் காஞ்சிப்பூவைப் பயன்படுத்துகின்றனர். கண்குளிர்ச்சி, சருமப் பாதுகாப்பு, தலைமுடி வளர்ச்சி போன்றவற்றுக்கும் காஞ்சிப்பூவைப் பயன்படுத்துகின்றனர்.

பயன்படுத்தும் முறை

தலைமுடி பராமரிப்புக்குக் காஞ்சிப் பூவை நன்றாக இடித்துச் சாறு எடுத்து, நல்லெண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்து வரலாம் . தோல் பராமரிப்புக்குப் பூவைக் காயவைத்து பொடி செய்து குளிக்கும் போது சோப்பிற்குப் பதிலாக உடம்பில் தேய்த்துக் குளித்து வரலாம். பூக்களை நிழலில் காய வைத்து, டீ போட்டுக் குடித்து வந்தால் உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

உழிஞைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் உழிஞைப்பூ ஐந்தாவதாக இடம்பெறுகின்றது. இப்பூ மிதமான வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் போதிய மழை போன்ற சூழல்களுடன் செம்மண்ணில் மலர்கின்றன. உழிஞைப்பூவை இன்று பேச்சு வழக்கில் "முடக்கத்தான்" என்று கூறுகின்றனர். உழிஞைப் பூவை ஆங்கிலத்தில் "*BALLOON VINE*" என்றும் தாவரவியலில் "*CARDIOSPERMUM HALICACABUM*" என்றும் அழைக்கின்றனர். உழிஞைப் பூ வாத நோய்களைக் குணப்படுத்தும். வயிற்றுவலி, மூட்டு வலி, காது வலி, உடலுக்கு குளிர்ச்சி போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம். இது முடக்கறுத்தான் கொடியின் பூவாகும். முடக்கறுத்தான் என்பது முடக்கை அறுத்தல் அதாவது முடக்குவாதம் போன்ற நோய்களுக்குப் பயன்படுவதால் இது முடக்கறுத்தான் என்று பெயர் பெற்றது.

பயன்படுத்தும் முறை

உழிஞை இலைகள் மற்றும் பூக்களைப் பறித்து அரைத்து வீக்கம், மூட்டுவலி உள்ள இடங்களில் பற்றுப்போட்டால் வலி மற்றும் வீக்கம் குறையும். பூ மற்றும் இலைச்சாற்றை லேசாகச் சூடாக்கி, காதில் சில துளிகள் விட்டால் காது வலி நீங்கும். இந்தப்பூ மற்றும் இலைகளைச் சமைத்து வாரத்திற்கு ஒருமுறை உணவில் சேர்த்துக் கொள்வது வாதம் போன்ற நோய்களைத் தடுக்கும். உழிஞைப்பூவின் மருத்துவப் பயனை அறிய களஆய்வு மேற்கொண்ட போது உழிகைப் பூவையும் அதன் இலையையும் எடுத்து அரைத்து மூட்டு வலி எங்குள்ளதோ அந்த இடத்தில் வைத்துக் கட்டினால் மூட்டுவலி குணமாகும் மற்றும் அதனைப் பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் முடக்குவாதம் போன்ற நோய்களும் குணமாகும் என்று தகவலாளர் தெரிவித்தார்.

நொச்சிப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் நொச்சிப்பூ ஆறாவதாக இடம்பெற்றுள்ளது. இப்பூ வண்டல் மற்றும் செம்மண்ணில் ஜனவரி முதல் செப்டம்பர் அல்லது அக்டோபர் வரை நீண்ட கால மலர்ச்சிப் பருவத்தைக் கொண்டுள்ளது. நொச்சிப்பூவை ஆங்கிலத்தில் chaste tree என்றும் தாவரவியலில் vitex negundo என்றும் அழைக்கின்றனர். தலைவலி அதிகமான உடல் சோர்வதைத் தரக்கூடியது. உடலில் ஏற்படும் நோய்களுக்கான உடனடி அறிகுறி தலைவலி. ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மக்கள் இயற்கை முறையில் தலைவலியைக் குணப்படுத்துகின்றனர். "கடுமையான ஒற்றைத் தலைவலி ஏற்படும் போது நொச்சிக் கொழுந்தை நிறையப் பறித்து அதனைத் தலைமுழுவதும் வைத்து அதன்மேல் துண்டு கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு கட்டிக் கொள்வதினால் கடுமையான ஒற்றைத் தலைவலி நீங்குகிறது". என்று மாரி குறிப்பிடுகிறார். இம் மருத்துவ முறை ஜவ்வாது மலையில் பரவலாகக் காணப்படுகிறது. நொச்சி இலை அதிகமான வெம்மை கொண்டவை. நொச்சிப்பூ குளிர்ச்சித் தன்மை உடையது.

பயன்படுத்தும் முறை

உலர்ந்த நொச்சிப் பூவை கற்கண்டுடன் சேர்த்துத் தேனில் கலந்து சாப்பிட்டு வர ரத்தம் கலந்த வயிற்றுப்போக்கு மற்றும் ரத்த வாந்தி ஆகியவை குணமாகும்.

தும்பைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் தும்பைப்பூ ஏழாவதாக இடம்பெறுகின்றன. தும்பைப்பூ மழைக்குப் பிந்தைய காலத்தில் முளைத்து வளர்ந்து, வறண்ட சூழலிலும் நிலைத்திருக்கும் தாவரமாக விளங்குகிறது. தும்பைப்பூவை இன்று பேச்சு வழக்கில் தும்பைச்செடி மற்றும் தட்டான் செடி என்றும் கூறுகின்றனர். தும்பைப் பூவை ஆங்கிலத்தில் LEUCAS FLOWER என்றும் தாவரவியலில் LEUCAS ASPERA என்றும் அழைக்கின்றனர். தும்பைப்பூ கண்வலி, கண்காசம், கண்படலம், மூக்குவலி, மூக்கில் புண், மூக்கடைப்பு, கபால நீர், தலைக்கனம், தலைவலி போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம் என எம்.பழனியப்பன், பசி.மரு, மற்றும் P.L பழனியப்பன் பசி.மரு தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

பயன்படுத்தும் முறை

தும்பைப்பூவைக் கசாயமாகப் பயன்படுத்தலாம்.

“தாகங் கடிந்தொழியுஞ் சந்நிபா தங்களறு
மாகந்தனில் வருநோ யண்டுமோ – மாகந்த
வம்பைப் பீறுங்குயத்து மாதேநின் செங்கரத்தாற்
றும்பைப்பூத் தன்னைத்தொடு”

என்று (பதார்த்த குணபாடம் 711) குறிப்பிடுகிறது.

1. தும்பைப்பூ -50 கிராம்

2. தண்ணீர் – 2 லிட்டர்

தும்பைப்பூவைப் பறித்து சுத்தம் செய்து 2 லிட்டர் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகக் கசாயம் எடுத்து உணவு உண்ணும் முன் 100 மில்லி வீதம் தினமும் ஒருவேளை 48 நாள்

ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் தாகம், அரிதாகம், குளிர்ஜுரங்கள், கண் வலி, கண்காசன், கண் படலம், மூக்கு வலி, மூக்கில் புண், மூக்கடைப்பு, கபால நீர், தலைக்கணம், தலைவலி இவையாவும் குணமாகும். தும்பைப் பூவின் மருத்துவப் பயனை அறிய கள ஆய்வு மேற்கொண்டபோது தும்பைப் பூவையும் இலையையும் எடுத்து தண்ணீரில் கொதிக்க வைக்கவும். பின்பு எரிகின்ற நெருப்பில் ஒரு செங்கலை இரண்டாக உடைத்து அந்த நெருப்பில் போட்டு சூடு படுத்தி அந்த கொதிக்கின்ற நீரில் போட்டு ஆவிபிடித்தால் "ஒற்றைத் தலைவலி" போய்விடும் என்று தகவலாளர் குறிப்பிட்டார்.

வாகைப்பூ

இரு இலக்கண நூல்களிலுள்ள புறத்திணையியலில் வாகைப் பூ எட்டாவதாக இடம்பெறுகின்றன. இப்பூ வெப்பமண்டலப் பகுதிகளில் நீண்ட காலம் மலரக்கூடியது. செம்மண், வண்டல் மண் மற்றும் களிமண் கலந்த மண்ணில் மார்ச் முதல் டிசம்பர் வரை மலர்கிறது. வாகைப் பூவை இன்று பேச்சு வழக்கில் "தூங்குமூஞ்சிப்பூ" என்று அழைக்கப்படுகின்றனர். வாகைப்பூவை ஆங்கிலத்தில் *SIRIS* என்றும் தாவரவியலில் *ALBIZIA LEBBECK* என்றும் அழைக்கப்படுகின்றனர். மூச்சுத் தொடர்பான நோய்களுக்கும், சளி, தோல்நோய், அக்கி நோய், பாம்புக்கடி, வாத நோய், கபம், பித்தம் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

"வாதசமனம் செய்யும் வல் விசத்தைப் போக்கிவிடும்
சீதசிலேத்மத்தைச் சிதைக்கும் காண் - போதவுள்ளே
மாகைப்பை வைத்திருக்கும் மாநிலத்திலேயே பெரிய
வாகைப்பூ தன்னை வழுத்து"

என்ற சித்தர் பாடல் வாகையின் சிறப்பைக் குறிப்பிடுகிறது.

பயன்படுத்தும் முறை

வாகைப்பூவைப் பொடியாகவும், பற்றுப்போட்டுப் பூசியும், பயன்படுத்தலாம். தேவையான அளவு வாகைப் பூக்களை உலர்த்தி இடித்து வைத்துக் கொள்ளவும். ஒரு தேக்கரண்டி தூளில் 2 தேக்கரண்டி தேன் கலந்து காலை உணவுக்கு முன் உட்கொள்ளவும். 20 நாட்கள் உண்ணவும். மூச்சுத் தொடர்பான நோய்களும், சளி போன்ற நோய்களும் குணமாகும்.

வாகைப்பூவை அரைத்துப் பூசினால் அக்கி நோய் தணியும். பூச்சாற்றில் மிளகை அரைத்துத்தரப் பாம்பு நஞ்சு நீங்கும். பூவைக் குடிநீர் செய்துதர வாத நோய்கள் நீங்கும். கபத்தையும் போக்கும். பூவை அரைத்து வெந்நீரில் தரப் பாம்பு விஷம் இறங்கும். கடிவாயிலும் பூசலாம். வாகைப் பூவை வீக்கம், பித்த தழும்புகளுக்கு அரைத்துப் பூசலாம்.

முடிவுரை

தொல்காப்பியர் காலகட்ட மக்கள் பயன்படுத்திய மலர்களைப் பற்றி தொல்காப்பியத்தின் வழி கட்டுரை ஆய்வுக்குட்படுத்தியுள்ளது. தொல்காப்பியர் சுட்டிய வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி, வாகை நொச்சி முதலான மலர்கள் பல்வேறு திணைகளின் அடையாள மலர்கள் என்பதைக் கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. வெட்சி முதலான மலர்களின் ஆங்கிலப் பெயருடன் அவற்றின் நோய்த்தீர்க்கும் தன்மையையும் எப்படி பயன்படுத்துவது என்பதையும் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. பல்வேறு திணைச் சார்ந்த மக்களின் நோயை நலப்படுத்தும் உயர்நிலை இருந்ததன் விளைவாகவே தமிழர் இம்மலர்களை அடையாளப்பூவாகச் சூடினர் என்பதை ஆய்வுப் புலப்படுத்தியுள்ளது. மேலும் இம்மலர்கள் அவர்கள் வாழ்ந்த சூழலில் வெகுவாக மலர்ந்திருந்தன

என்பதும் குறிப்பிடத்தக்கது. அடையாள மலர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவற்றுக்கான திணை என்னவென்பதையும் ஆய்வு சுட்டியுள்ளது.

துணை நூற்பட்டியல்:

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் , இளம்பூரணர், முதற்பதிப்பு -2008,3ம் பதிப்பு-2015, சாரதா பதிப்பகம், ஜி 4 சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 600014.
2. புறப்பொருள் வெண்பாமாலை, புலியூர்க்கேசிகன், முதற்பதிப்பு- ஆகஸ்ட் 2009, 3ம் பதிப்பு- மே 2012, சாரதா பதிப்பகம், ஜி 4 சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை 600014.
3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், திருஞானசம்பந்தர், முதற்பதிப்பு ஜூன் 2013, கதிர் பதிப்பகம், திருவையாறு, தெற்கு வீதி, செல் : 9443190379.

References

1. Ilampooranar (Ed.) – Tolkappiyam: Porulathikaram, Saradha Publishing House, G-4 Shanthi Apartments, 3 Sri Krishnapuram Street, Royapettah, Chennai 600014, 1st Edition – 2008, 3rd Edition – 2015.
2. Puliyur Kesikan – Purapporul Venba Malai, Saradha Publishing House, G-4 Shanthi Apartments, 3 Sri Krishnapuram Street, Royapettah, Chennai 600014, 1st Edition – August 2009, 3rd Edition – May 2012.
3. Thirugnanasambandhar – Tolkappiyam: Sollathikaram, Kathir Publishing House, South Street, Thiruvaiyaru, Mobile: 9443190379, 1st Edition – June 2013.
4. இணையதளம் hindu tamil Thisai (https://www.hindutamil . in
5. இணையதளம் facebook (https://www.facebook . com)
6. இணையதளம் (https : // Share . google/aimode/vy jijQF5aj 064Ar70)
7. இணையதளம் (https://share . google/aimode/YW VYMXET402x5d3pt)

தகவலாளர் குறிப்பு

வ. எண்	பெயர்	வயது	ஊர்	படிப்பு	தொழில்	பாலினம்	இனம்
1	மல்லிகா	38	பல்லடம்	8	குடும்பத் தலைவி	பெண்	வலையர்
2	வீரம்மாள்	77	பல்லடம்	படிப்பில்லை	குடும்பத் தலைவி	பெண்	நாயக்கர்

Cite this Article in English

Karthickeyan.A, Manimegalai.R "**Medicinal Perspectives on the Flowers Mentioned by Tolkappiyar**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 8-14*